INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY | DIGITAL SKILLS for LIFE

# இணையவழித் தளங்களில் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு




கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்து இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருக்க கற்றுக்கொள்ளலாம்

GO gov.sg

இதற்கான ஆதரவு
DIGITAL FOR LIFE
PLAY IT FORWARD
SMART NATION SINGAPORE

இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| முகப்புரை | 2 |
| சுய குற்றச்சாட்டைத் தவிர்க்கவும் | 3 |
| தரவு தனியுரிமையைப் பாதுகாக்கவும் | 6 |
| பொறுப்பான பகிர்வு | 9 |
| இணைய நெறிமுறைகள் | 12 |




# முகப்புரை

வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்கள் (DSL) வழிகாட்டிப் புத்தகம் என்பது தினசரி வாழ்க்கைக்குத் தேவையான டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொள்ள உதவும் சிற்றேடுகளின் தொகுப்பாகும். இது, டிஜிட்டல் உலகில் நீங்கள் நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் இருப்பதற்காக நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியபடிப்படியான வழிமுறைகள் மற்றும் விரைவான உதவிக்குறிப்புகளைப் பற்றி விளக்குகிறது.

தினசரி வாழ்க்கைக்குத் தேவைப்படும் டிஜிட்டல் திறன்களை கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்காகவும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த DSL திறன்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி 5 திறன்களைக் கொண்ட பகுதிகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன.

**கற்றல் விளைவுகள்:**
இந்த வழிகாட்டிக் கையேடு ‘இணையவழித் தளங்களில் பாதுகாப்பாக, விவேகமாக, கனிவாக இருத்தல்’ திறன் மீது கவனம் செலுத்துகின்றது, இதில் நீங்கள் கற்றுக்கொள்வது:

- மொபைல் சாதனம் மற்றும் கணக்குகளைப் பாதுகாப்பதோடு, தீங்கிழைக்கும் இணைய உள்ளடக்கம்மற்றும் மோசடிகளை அடையாளம் கண்டு, அவற்றுக்கு எதிராகப் பாதுகாத்துக் கொள்ள இயலும்.




இந்த வழிகாட்டி பொதுவான மென்பொருள் சின்னங்கள் மற்றும் மொபைல் சாதன அமைப்புகளை அடிப்படையாகக் கொண்டது. சில அம்சங்கள் மற்றும் பயனர் இடைமுகம் வெவ்வேறு கைப்பேசிகளிள் வேறுபடக்கூடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

# 1 சுய குற்றச்சாட்டைத் தவிர்க்கவும்

ஒரு மோசடியின் பாதிப்பிலிருந்து மீண்டுவருதல்: பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கான உதவிக்குறிப்புகள்

## a. மோசடியினால் ஒருவரின் உடல்நலத்தில் ஏற்படும் தாக்கங்கள்




### மன அழுத்தம்

- பண மோசடியினால் ஏற்படும் தாக்கம் தீவிரமான, நீண்டகால மன அழுத்தத்திற்கு வழிவகுக்கும்.
- மன அழுத்தமானது மனச்சோர்வு மற்றும் பதட்டம் போன்ற சிக்கல்களை ஏற்படுத்தலாம். இது உற்சாகமற்ற மனநிலை, தூக்கமின்மை அல்லது பீதி தாக்குதல்கள் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகிறது.
- இது அன்றாட வாழ்க்கை, சமூகத்துடனான தொடர்புகள் மற்றும் வேலையின் செயல்திறனைப் பாதிக்கிறது.

### அவமானம் அல்லது சுய சுயமரியாதை

- பாதிக்கப்பட்டவர்கள் அவமானப்பட்டது போன்று உணரலாம், இது மனச்சோர்வு மற்றும் சமூகத்திலிருந்து அவர்கள் விலகியிருப்பதற்கு வழிவகுக்கும்.
- இந்த உணர்ச்சிகளினால் அவர்களுக்குத் தேவையான ஆதரவைக் கூட அவர்கள் மறுக்கலாம்.

### மனஅதிர்ச்சி மற்றும் சித்தப்பிரமை

- மோசடியால் பாதிக்கப்பட்டவர்கள் தொலைபேசி அழைப்புகளை எடுக்க பயப்படலாம்.
- பாதிக்கப்பட்டவர்கள் பணத்தைக் கையாள்வதற்கு அதிகமாகப் பயப்படக் கூடியவர்களாக மாறலாம்.

## b. மோசடிகளினால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வாறு உதவி பெறுவது?

### உங்களைத் தனிமைப்படுத்திக் கொள்ளாதீர்கள்

- குடும்பம் மற்றும் நண்பர்களிடமிருந்து **சமூக ஆதரவைப் பெறுங்கள்**.

### சுய-கவனிப்பு

- இழப்பினால் ஏற்பட்ட வலியின் நினைவிலிருந்து மீள்வதற்கு உதவும் வகையில் நீங்கள் விரும்பும் **செயல்களில் ஈடுபடவும்.**

### உங்களைக் கனிவுடன் நடத்துங்கள்

- **எதிர்மறை உணர்ச்சிகள் நியாயமானவை**, ஆனால் அதே அவமானத்திலே வாழ்வது உதவாது.
- **தவறுகள் நடப்பது இயல்பு என்பதை உணருங்கள்**; அது உங்களைத் தோல்வியடையச் செய்யாது.

### துக்கத்தைக் கையாளுதல்

- **துக்கத்தின் நிலைகளின் வழியாக அடையும் முன்னேற்றம்:** ஏற்க மறுத்தல், கோபம், வருத்தம் மற்றும் இறுதியில் ஏற்றுக்கொள்ளுதல்.
- பணப்பிரச்சனை மற்றும் வருத்தத்திலிருந்து மீண்டு வருவதற்கான **செயலில் உள்ள படிகளைத் திட்டமிடுங்கள்**.
- **உங்கள் எதிர்பார்ப்புகளைப் பேணுங்கள்;** மீண்டுவருதல் ஒரு நீண்ட பயணமாக இருக்கலாம்.

### தேவைப்படும் பட்சத்தில், தொழில்முறை உதவியை நாடவும்

- தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு உற்சாகமற்று உணர்ந்து, மேலும் அது உங்கள் வேலை, குடும்பம் மற்றும் சமூக வாழ்க்கையைப் பாதிக்கும் பட்சத்தில், **தொழில்முறை உதவி பெற்றுக்கொள்வதைக் கருத்தில்கொள்ளுங்கள்**.
- உதவிக்கு, **மோசடி தொடர்பான பிரச்சனைகளுக்கான ஆலோசனையைப் பெறவும் அல்லது மனநல ஆலோசனை சேவைக்கான உதவி எண்களை அணுகவும்:**

i

**ScamAlert (மோசடி தொடர்பான ஆலோசனை):**
1800-722-6688

**TOUCHline (ஆலோசனை):**
1800-377-2252

**TOUCH Care Line (முதியோர், பராமரிப்பாளர்களுக்கானது):**
6804-6555

## C. உங்களின் அன்புக்குரியவர்களை ஆதரிப்பதற்கான நடைமுறை உதவிக்குறிப்புகள்

### பச்சாதாபமான வார்த்தைகளைப் பயன்படுத்தவும்

- உங்கள் அன்புக்குரியவரின் உணர்வுகளைப் **புரிந்துகொள்ளவும்**.
- "**மோசடிகளுக்கு இரையாகுதல்**" போன்ற அவர்களின் எதிர்மறையான சுய-தோற்றத்தை அல்லது அவமான உணர்வை வலுப்படுத்தக்கூடிய **சொற்றொடர்களைத் தவிர்க்கவும்**.
- புரிதலையும் ஆதரவையும் வெளிப்படுத்தும் **வார்த்தைகளைத் தேர்ந்தெடுக்கவும்**.

### முன் தீர்மானம் அல்லது திருத்தத்தை வெளிப்படுத்த வேண்டாம்

- முதலில் அவர்களின் உணர்வுகளுக்கு **முக்கியத்துவம் அளிக்கவும்.** நல்ல மனநிலையில் இருக்கும் போது, அவர்கள் பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பார்கள்.
- "**நீங்கள் அவ்வாறு செய்திருக்கக்கூடாது**" அல்லது "**அடுத்த முறை மிகவும் கவனமாக இருக்கவும்**" போன்ற **சொற்றொடர்களைத் தவிர்க்கவும்**.





*இந்த ஆதாரவளம் TOUCH சமூகக்குழு சேவைகளிலிருந்து குறிப்புகளைப் பெறுகிறது.*

# 2 தரவு தனியுரிமையைப் பாதுகாக்கவும்

உங்கள் தனியுரிமையைப் பாதுகாத்தல்: தனிப்பட்ட தரவுகளைப் பாதுகாத்தல்

## உங்கள் தனிப்பட்ட தரவுகளைக் கவனமாகப் பகிரவும்

தொழில்நுட்பத்தால் இயங்கும் இன்றைய உலகில், உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பது மிகவும் அவசியம். உங்கள் தரவுகளைப் பொறுப்புடன் பகிர்ந்து கொள்ள, இந்த எளிய ஆலோசனைகளைப் பின்பற்றவும்:




### உங்கள் தனிப்பட்ட தரவை யாருடன் பகிர்ந்து கொள்கிறீர்கள் மற்றும் எதற்காகப் பகிர்கிறீர்கள் என்பதை அறிந்து கொள்ளவும்

- நிறுவனங்கள் தனிப்பட்ட தரவு சேகரிப்பு மற்றும் அதன் நோக்கம் பற்றிய தகவல்களை வழங்க வேண்டும், மேலும் அதற்கான உங்கள் ஒப்புதலைப் பெற வேண்டும்.
- **உங்கள் தனிப்பட்ட தரவை யாரிடம் பகிர்கிறீர்கள், எதற்காகப் பகிர்கிறீர்கள் என்பதை** எப்போதும் **தெரிந்து வைத்திருப்பது நன்று.** புரியவில்லை எனில் கேட்கவும்!

## உங்களுக்கு நம்பகமாக உள்ள நிறுவனங்களுடன் பரிவர்த்தனை செய்யவும்

- **தரவுப் பாதுகாப்புக்கான நம்பிக்கை முத்திரை (DPTM) லோகோவைக் கொண்ட நிறுவனங்களைத் தேர்வுசெய்யவும், ஏனெனில் அவை பொறுப்பு வாய்ந்த தரவுப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.**

DATA PROTECTION ASSURED

- **நீங்கள் நம்பும் நிறுவனங்களுடன்** பரிவர்த்தனை செய்யத் தேர்வு செய்யவும்.

## உங்கள் தரவுக்கான பொறுப்பை ஏற்கவும்

- தனிப்பட்ட தகவல்களைக் கொண்ட ஆவணங்களைத் தூக்கி எறிவதற்கு முன் அவற்றை **துண்டு துண்டாக நறுக்கவும் அல்லது அழிக்கவும்.**
- **என்.ஆர்.ஐ.சி, தொலைபேசி எண்கள், முகவரிகள் மற்றும் பிறந்த தேதிகள் போன்ற தனிப்பட்ட தரவுகளை இணையத்தில் பகிர்வதில் கவனமாக இருக்கவும்.** இணையத்தில் வந்துவிட்டால், அதைக் கட்டுப்படுத்துவது கடினம்.

## உங்கள் உலாவல் விருப்பங்களை நிர்வகிக்கவும்

- **உங்கள் உலாவல் அமைப்புகளைக் கட்டுப்படுத்தி,** நீங்கள் எந்தெந்த வகையில் கண்காணிக்கப்பட அனுமதிக்கலாம் என்பதைத் தீர்மானிக்கவும்.
- பல வலைத்தளங்கள் சந்தைப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகத் தரவுகளைச் சேகரிக்கின்றன.

## பகிர்வதற்கு முன் நன்கு சிந்திக்கவும்

- அவசரமான காரணமாக இருப்பினும், மின்னஞ்சல்கள் அல்லது குறுஞ்செய்திகளில் **தனிப்பட்ட தகவல்களை அளிக்க வேண்டாம்**.
- மின்னஞ்சல்கள் அல்லது குறுஞ்செய்திகள்/அழைப்புகள் மூலம் பணப் பரிமாற்றம் செய்யவோ அல்லது உங்கள் அடையாளத்தைச் சரிபார்க்கவோ சட்டப்பூர்வமான நிறுவனங்கள் உங்களை ஒருபோதும் கேட்காது. சந்தேகம் இருந்தால், **அவர்களுடன் நேரடியாகத் தொடர்புகொண்டு சரிபார்க்கவும்.**

## உரிமம் பெறாத வட்டிக் கடன் பரிமாற்றம் மற்றும் சூதாட்டத்தைப் பற்றி புகாரளிக்கவும்

- சட்டவிரோதப் பணம் அல்லது சூதாட்டம் தொடர்பான செய்திகளைக் கண்டால் **அதிகாரிகளுக்குப் புகாரளிக்கவும்**.
- **இத்தகைய செய்திகளைப் புறக்கணித்து**, **www.scamalert.sg** அல்லது ஸ்கேம்-தடுப்பிற்கான ஹாட்லைன் எண்ணான **1800-722-6688** மூலம் அதிகாரப்பூர்வ ஆதாரங்களைப் பார்க்கவும்.

## இணைப்புகளின் நம்பகத்தன்மையைச் சரிபார்க்கவும்

- உங்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய தரவு மீறல் ஏதேனும் நிகழ்ந்தால், நிறுவனங்கள் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.
- எந்தவொரு இணைப்புகளையும் கிளிக் செய்வதற்கு முன், நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ இணையத்தளம் அல்லது ஹாட்லைனைச் சரிபார்த்து, **அறிவிப்புகளின் நம்பகத்தன்மையை எப்போதும் சரிபார்க்கவும்.**

## தனிப்பட்ட தரவைப் பாதுகாக்க பின்வரும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்


- கடவுச்சொற்களை மாற்றுவது அல்லது உங்கள் வங்கிகளைத் தொடர்புகொள்வது போன்ற உங்கள் தனிப்பட்ட தரவைப் பாதுகாக்க நிறுவனம் கூறும் **அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்**.

## Scamshield பாதுகாப்பைப் பெறுங்கள்

- **Scamshield செயலியைப் பதிவிறக்கவும்**. இது மோசடி குறுஞ்செய்திகளைக் கண்டறியவும், தடுப்புப்பட்டியலில் உள்ள எண்களிலிருந்து வரும் அழைப்புகளைத் தடுக்கவும் உங்களுக்கு உதவும்.

Android

iOS





*இந்த ஆதாரவளம் சிங்கப்பூர் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு ஆணையத்திலிருந்து (பி.டி.பி.சி) குறிப்புகளைப் பெறுகிறது.*

# 3 பொறுப்பான பகிர்வு

## இணையவழித் தளங்களில் பொறுப்பான பகிர்வு: சிறந்த நடைமுறைகள்

### a. பகிரும் முன் சிந்தியுங்கள்




#### இது உண்மைதானா?

- **பிற நம்பகமான ஆதாரங்கள் மற்றும் செய்தி** சேனல்களின் மூலம் சரிபார்க்கவும்.
- **Factually** (சிங்கப்பூர் தொடர்பான விவரங்களுக்கு), **FactCheck** அல்லது **Snopes** (சர்வதேச விவரங்களுக்கு) போன்ற உண்மைச் சரிபார்ப்பு இணையத்தளங்களைப் பயன்படுத்தவும்.
- **scamalert.sg** இல் மோசடிகளைப் பற்றி தெரிந்து கொள்ளவும் அல்லது **1800-722-6688** என்ற எண்ணில் ஸ்கேம்-தடுப்பிற்கான ஹாட்லைனைத் தொடர்பு கொள்ளவும்.

#### இது உங்களுக்கு உதவியாக உள்ளதா?

- இந்தக் கட்டுரை **பயனுள்ள தகவல்களை** வழங்குகிறதா என மதிப்பிடவும்.
- **உள்ளடக்கத்தை உருவாக்குபவரின் நோக்கங்களைக்** கருத்தில் கொள்ளவும் .
- மோசடிகள் பெரும்பாலும் நம்பமுடியாத அளவிற்குச் சிறந்த சலுகைகள் மூலம் பாதிக்கப்படுபவர்களைக் கவர்ந்திழுப்பதால், **எப்போதும் சரிபார்க்கவும்**.

## இது உத்வேகம் தருகிறதா?

- இதன் உள்ளடக்கம் **நேர்மறையான நடத்தையை ஊக்குவிக்கிறதா** மற்றும் நியாயமான **காரணத்தை ஆதரிக்கிறதா** என்பதைக் கருத்தில் கொள்ளவும்.
- இந்த உள்ளடக்கத்துடன் **இணைந்திருப்பதில் பெருமைப்படுகிறீர்களா** என்பதைப் பற்றி சிந்திக்கவும்.
- மற்றவர்களை **ஊக்குவிக்கும் மற்றும் மேம்படுத்தும்** உள்ளடக்கத்தைப் பகிரவும்.

## இது அவசியமானதா?

- பகிரப்படும் உள்ளடக்கம் **சமூகத்திற்குப் பயனளிக்கக் கூடியதா** அல்லது ஒருவரை **எதிர்மறையாக பாதிக்குமா** என்பதைக் கருத்தில் கொள்ளவும்.
- தனிப்பட்ட தகவல்கள், உரைகள், காணொளிகள் அல்லது செய்திகள் போன்றவற்றை **அதிகம் பகிர்வதைத் தவிர்க்கவும்**.

## இது அன்பான தொனியில் உள்ளதா?

- உங்கள் **வார்த்தைகள், தொனி மற்றும் அணுகுமுறை கனிவானதாக** உள்ளதா என்பதைக் கருத்தில் கொள்ளவும்.
- இது யாரையேனும் **தற்செயலாகப் புண்படுத்துமா** என்பதைக் கருத்தில் கொள்ளவும்.
- **இணையத்தில்** பதிவிடப்பட்ட கருத்துகள் நீண்ட காலத்திற்குப் பிறகும் கூட, **தொடர்ந்து காயப்படுத்திக் கொண்டே இருக்கும்** என்பதை நினைவில் கொள்ளவும்.

# b. பொறுப்பற்ற பகிர்வின் பின்விளைவுகளை அறிந்து கொள்ளவும்

## புரளிகள் மற்றும் மோசடிகள்

- சரிபார்க்கப்படாத தகவல்களைப் பகிர்வது, **புரளிகள் மற்றும் மோசடிகளை மற்றவர்கள் எளிதாக நம்புவதற்கு வழிவகுக்கும்**, மேலும் இது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தலாம்.
- உதாரணமாக, தவறான மின்னஞ்சல்கள் அல்லது அதிகாரப் பிரமுகர்களைப் போன்று ஆள்மாறாட்டம் செய்யும் செய்திகள் போன்றவை, தனிநபர்களைத் தங்களின் தனிப்பட்ட தகவல்களை வெளியிடும் வகையில் ஏமாற்றியுள்ளன.

## தேவையற்ற பயத்தைப் பரப்புதல்

- தவறான தகவல்களைப் பகிருதல், மக்களிடையே **தேவையற்ற அச்சத்தை பரப்பி**, அவர்களின் செயல்களையும் முடிவுகளையும் பாதிப்படையச் செய்யும்.
- உதாரணமாக, தவறான செய்திகள் தேவையற்ற கவலைகளை உருவாக்கி, தவறான செயல்களுக்கு வழிவகுக்கும்.

## எதிர்மறையான சைபர் சூழல்

- மற்றவர்களைப் பற்றிய எதிர்மறையான உள்ளடக்கத்தைப் பகிருதல், **அவர்களின் உணர்வுகளில் ஒரு உண்மையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது**.
- பொதுவெளியில் பிறரை அவமானப்படுத்துதல் போன்ற எதிர்மறையான இணையத்தள நடத்தைகள் தனிநபர்களை உணர்ச்சிரீதியாகக் காயப்படுத்தலாம், மேலும் விரோதமான இணையத்தள சூழலுக்குப் பங்களிக்கலாம்.




*இந்த ஆதாரவளம் ஊடக அறிவு மன்றத்திலிருந்து கு றிப்புகளைப் பெறுகிறது.*

# 4 இணைய நெறிமுறைகள்

## டிஜிட்டல் நெறிமுறைகள் 101: இணையவழித் தளங்களில் மரியாதை மற்றும் நேர்மறையான தன்மை நெறிமுறைகள்

### a. உங்களுக்கும் மற்றவர்களுக்கும் மரியாதை அளிப்பதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளவும்




#### உங்களின் டிஜிட்டல் நற்பெயரைப் பாதுகாக்கவும்

- இணையத்தில் பதிவிடுவதற்கு முன் **கவனமாக இருக்கவும்**, அனைத்தையும் கண்டறிந்து நகலெடுக்க முடியும்.
- எதிர்மறையான அல்லது தவறான பதிவுகள் உங்கள் **டிஜிட்டல் நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கும்.**

#### நபர் மீது கவனம் செலுத்தாமல், விவாதத்தில் கவனம் செலுத்தவும்

- எதிர்விளைவுகளைக் கருத்தில் கொண்டு மதிப்புமிக்க **கருத்துக்களைப் பகிரவும்**.
- **அவமானங்களைத் தவிர்க்கவும்**; உடன்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதும் இயல்பே.

## b. நேர்மறையான நடத்தையை வெளிப்படுத்தி, நேர்மறை இணையப் பயன்பாட்டைப் பெறவும்

### நேர்மறையாகப் பதிவிடவும்

- நாகரீகமாகவும் மரியாதையுடனும் **ஆக்கப்பூர்வமான உரையாடலில் ஈடுபடவும்**.
- எதிர்மறையான அனுபவங்களுக்குப் பிறகு **உடனடியாகப் பதிவிடுவதைத் தவிர்க்கவும்**.
- ஆக்கப்பூர்வமாக **உங்கள் பதிவுகளை வடிவமைக்கவும்** அல்லது நேர்மறையான பரிந்துரைகளைப் பகிரவும்.

### எதிர்மறை கருத்துக்களுக்கு எதிராக நிற்கவும்

- ஹோஸ்டிங் தளங்களுக்கு வரும் சைபர் மிரட்டல் மற்றும் தொந்தரவுகளைப் பற்றி **புகாரளிக்கவும்**.
- மிகவும் நேர்மறையான இணைய சூழலில் உள்ள எதிர்மறையான உள்ளடக்கம் மற்றும் தவறான தகவல்களைப் பற்றி **புகாரளிக்கவும்**.

### மற்றவர்களின் தனியுரிமையை மதிக்கவும்

- **'டாக்சிங்'** என்பது பிறரின் தனிப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து அவர்களைத் தொந்தரவு செய்தல் அல்லது அச்சுறுத்துதல்; இது சிங்கப்பூரில் ஒரு குற்றம் ஆகும்.
- இத்தகைய தீங்கிழைக்கும் செயலில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

### பச்சாதாபத்துடன் நடந்துகொள்வதைப் பயிற்சி செய்யவும்

- உடன்படாததற்கு முன் மற்றவரின் கண்ணோட்டங்களையும் **புரிந்து கொள்ள முயற்சிக்கவும்**.
- உங்கள் வார்த்தைகள் மற்றவர்களைப் பாதிக்கும் என்பதை நினைவில் கொள்ளவும்; அன்பாக இருக்கவும், மேலும் நீங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என விரும்புகிறீர்களோ அப்படியே மற்றவர்களையும் நடத்தவும்.

### மற்றவர்களைப் பொதுவெளியில் அவமானப்படுத்த வேண்டாம்

- நெட்டிசன்கள் சூழ்நிலைப் பொருத்தம் இல்லாமல் முடிவுகளை எடுக்கலாம், இது கடுமையான விளைவுகளுக்கு வழிவகுக்கும்.
- **தனிப்பட்ட மனக்குறைகளை ஆஃப்லைனில் எடுத்துக்கொண்டு**, தனிப்பட்ட முறையிலே தீர்த்துக்கொள்ளவும்.

### பகிரும் முன் சிந்திக்கவும்

- **சரிபார்க்கப்படாத உள்ளடக்கத்தில் எச்சரிக்கையாக இருக்கவும்**, குறிப்பாகச் சலுகைகள் மற்றும் டீல்களில்.
- எதிர்மறையான தகவல்களைப் பரப்பக்கூடிய, மற்றவர்களுக்கு **அவமானம் தரக்கூடிய உள்ளடக்கத்தைப் பகிர்வதைத் தவிர்க்கவும்**.

## அறிவுசார் சொத்துக்களுக்கு மதிப்பளிக்கவும்

- மற்றவர்களின் உழைப்பை அனுமதியின்றி பயன்படுத்தாமல் இருப்பதன் மூலம் **அறிவுசார் சொத்துரிமைகளுக்கு மதிப்பளிக்கவும்**.
- மற்றொருவரின் உள்ளடக்கத்தைப் பயன்படுத்தும் போது, **எப்போதும் அவர்களின் அனுமதியைக் கேட்டு, அவர்களுக்கு முறையான பாராட்டை வழங்கவும்**.

## C. நேர்மறை இணையப் பயன்பாட்டை மற்றவர்களும் பெறுவதற்கு எவ்வாறு உதவவேண்டும்

### எடுத்துக்காட்டு மூலம் வழிநடத்தவும்


- நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்களுக்கு **ஒரு நேர்மறையான எடுத்துக்காட்டை அமைக்கவும்**; உங்கள் செயல்கள் நல்ல டிஜிட்டல் நெறிமுறைகளை ஊக்குவிக்கும்.

### நம்பகமான ஆதாரவளங்களைப் பகிர்ந்து கொள்ளவும்

- நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பயனுள்ள தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கு முன், அதன் **நம்பகத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளவும்**.

### எதிர்மறையான நடத்தையைச் சுட்டிக்காட்டவும்

- **ஒரு பார்வையாளராக மட்டுமே இருக்காதீர்கள்**; எதிர்மறையான நடத்தையை சுட்டிக் காட்டி, மாற்று அணுகுமுறைகளைப் பரிந்துரைக்கவும்.




*இந்த ஆதாரவளம் ஊடக அறிவுமன்றத்திலிருந்து குறிப்புகளைப் பெறுகிறது.*

**கூடுதல் தகவலுக்கு மற்றும் உங்கள் அருகிலுள்ள சிங்கப்பூர் மின்னிலக்க சமூக நடுவத்தைக் கண்டறிய:**

**IMDA தொடர்பு மையம்**

**ஹாட்லைன்:** +65 6377 3800
**கருத்தைத் தெரிவியுங்கள்:**
go.gov.sg/imda-feedback
**இணையத்தளம்:**
digitalforlife.gov.sg

**QR குறியீட்டை ஸ்கேன் செய்து வாழ்நாள் மின் னிலக்கமயத்திற்க்கு செல்லவும்**

© 2026 தகவல்தொடர்பு ஊடக மேம்பாட்டு ஆணையம். அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆதாரத்தின் எந்தப் பகுதியையும் IMDA வின் வெளிப்படையான ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தவோ நகலெடுக்கவோ கூடாது. இந்த வழிகாட்டியுடன் தொடர்புடைய ஆவணங்களின் பதிப்புரிமை பாதுகாப்பிற்கு உட்பட்டதாக இருக்கலாம். இவற்றுள் பின்வருபவையும் அடங்கும்: ஆவணங்கள், ஸ்லைடுகள், படங்கள், ஒலி மற்றும் காணொளி. காப்புரிமை பெற்ற பொருட்களை அங்கீகாரம் இல்லாமல் வைத்திருப்பது, நகல் எடுப்பது, விநியோகம் செய்வது அல்லது மாற்றியமைப்பது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.